
## டின்லாக் டயர் ஸ்ப்ரே வாகனங்களின் டயர்களின் மேல் ஸ்ப்ரே செய்யும் வழிமுறைகள் (பஸ்/லாரி/MCV/LCV/வேன்/ஜீப்/கார்/ஆட்டோ/பைக்/ஸ்கூட்டர் டயர்களுக்கு) பக்கம் 1

**1. டயர்களில் தண்ணீர் ஊறவைப்பது** : வாகனத்தை ஒரு உலர்ந்த மேடான இடத்தில் நிறுத்தவும். 2 / 3 நிமிடங்களுக்கு ஒருமுறை வாகனத்தின் எல்லா டயர்களின் மேலும் மீண்டும் மீண்டும் தண்ணீரை ஊற்றவும். ஒவ்வொரு டயராக கை பிரஷ் கொண்டும் கழுவவும். (தண்ணீர் டயரினுள் நன்கு ஊறும்படி ஊற்றி கழுவவும்). (சிறிய டயர்களுக்கு 15 - 20 நிமிடங்ளுக்கு, கார் எல்சிவி எம்சிவி டயர்களுக்கு 30-35 நிமிடங்ளுக்கு) பஸ், லாரி டயர்களுக்கு 40 முதல் 45 நிமிடங்கள் இதுபோல் தண்ணீர் ஊற்றி டயர்களை கை பிரஷ் கொண்டு, டயர்களுக்குள் தண்ணீர் நன்கு ஊறும் படி தண்ணீரால் கழுவவும். ஒவ்வொரு டயரிலும் மேற்கூறியபடி பல நிமிடங்கள் தண்ணீர் நன்கு ஊற வேண்டும். டயர்களை காயவிடாமல் டயர்களின் மேல் தண்ணீரை 2 நிமிடங்களுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் ஊற்றவும். **டயரில் கலவை அடிப்பது** : முதலில் ஒரு டயரினை ஜாக்கி போட்டு தூக்கவும். (பைக், ஸ்கூட்டர் டயர்களுக்கு ஒரு பக்கம் அமுக்கினால் மறுபக்கம் தூக்கும்) (ஜாக்கி போடாமல் பெரிய வாகனங்களுக்கு எப்படி டின்லாக் டயர் ஸ்ப்ரே செய்வது என்று அறிய 3 மணிநேர இடைவெளி முறையை படிக்கவும்) அந்த டயரினை மீண்டும் ஓரிறு முறை தண்ணீர் ஊற்றி கைபிரக்ஷ் கொண்டு முழு டயரையையும் நன்கு கழுவவும். பிறகு உடனே டயரின் பட்டன்களில் இடுக்குகளில் சிக்கியிருக்கும் அதிகபட்சமான நீரை கை பிரஷினால் ஒருமுறை விலக்கவும் (அல்லது டயரின் வேகமாக சுற்றவும்). பிறகு டயரின் குறுக்கே ஒரு வெள்ளை சாக்கினால் ஸ்ப்ரே ஆரம்பிக்கும் இடத்கை நன்கு கோடு போடவும். இப்பொழுது இந்த டயர் தண்ணீரில் நன்கு ஊறி, டயர் முழுவதும் சமமான ஈரமாக, டின்லாக் டயர் ஸ்ப்ரே செய்ய தயாராக, இருக்கிறது. உடனே டயர் முழுவதும் ஈரமாக இருக்கையிலேயே டின்லாக்ஃ டயர் ஸ்ப்ரேயினை, டயரின் பட்டன்களின் மேலும், இடுக்குகளிலும் சீராக (டயர் சாலையில் படும் இடங்களில் மட்டும்), சமனாக, ஓரே அளவாக படும் படி, டயரை மெதுவாக சுற்றி (ஆரம்பித்த இடத்திலிருந்து மீண்டும் அதேஇடம் வரை டயரை சுற்றி) டயரில் நன்கு படும் படி ஸ்ப்ரே செய்யவும் (ஸ்ப்ரே பாட்டிலை டயரிலிருந்து சுமார் 5 (அ) 7 அங்குள தூரத்தில் பிடித்துக்கொண்டு). டயரின் பட்டன்களின் மேல் 90% பகுதியில் ஸ்ப்ரே பட்டால் கூட போதும், அதுவே பரவும்) ஒரே இடத்தில் அதிக அளவு படும்படி ஸ்ப்ரே செய்யவேண்டாம். டயரின் பக்கங்களில் ஸ்ப்ரே செய்ய கூடாது. www.dinlog.in இணையதளத்தில் உள்ள ஸ்ப்ரே செய்யும் வீடியோ படங்களை பார்க்கவும்)

இப்படி முறையாக ஸ்ப்ரே செய்தால், டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க மட்டும் ஒரு சிறிய டயருக்கு 15~25 நொடிகளும், மிதமான அளவிளான டயருக்கு 30~35 நொடிகளும், பெரிய லாரி/பஸ் டயருக்கு 45~55 நொடிகள் மட்டுமே ஆகும். இரட்டை டயர்களாயின் (பஸ்/லாரி/**MCV)** ஸ்ப்ரேயின் மூக்கினை ஒருபக்கமாக சாய்த்து கொண்டு ஒரு டயரின் மேல் பட்டும் ஸ்ப்ரே படும்படி ஸ்ப்ரே செய்ய வேண்டும். அல்லது இரு டயர்களுக்கும் இடையில் ஒரு அட்டையை பிடித்துக்கொள்ளவும். ஒவ்வொரு டயராக ஸ்ப்ரே அடிக்கவும். அல்லது இரட்டை டயர்களை 5 பாகங்களாக பிரித்து, கோடு போட்டுகொண்டு, இரு டயர்களிலும் ஒவ்வோரு பாகமாக ஒரே சமயத்தில் அடித்து முடிக்கலாம். (ஜாக்கி உபயோகிக்காமல் 3 மணி நேர இடைவெளி முறையில் ஸ்ப்ரே செய்தால், இரு டயர்களின் மேலும் படும்படியாக ஒரேயடியாக இரு டயர்களுக்கும் ஸ்ப்ரே செய்யலாம்). கலவை ஸ்ப்ரே செய்த 5 நிமிடங்களுக்கு பிறகு ஜாக்கியை கயற்றி அடுத்த டயரை தூக்கலாம். ஜாக்கியை கயற்றும் முன் டயரின் கீழ்ே ஒரு உலர்ந்த அட்டை அல்லது பழைய தினதாள்கள் கிடத்தலாம். அந்த டயரின் கீழ் அதகிமாக தண்ணீர் இருந்தால் அந்த நீரை விலக்கி விட்டு டயரினை கீழே இறக்கவும். ஏனெனில் கலவை அடித்த 3 மணி நேரத்திற்கு டயரின் மேல் மற்ற எந்த நீரும் பட கூடாது. ( www.dinlog.in இணைய தளத்தில் உள்ள டயர்களுக்கு ஸ்ப்ரே செய்யும் பட வீடியோக்களையும் பார்த்தால் எந்தெந்த அளவு டயர்களுக்கு எந்த அளவுக்கு (இடைவெளி விட்டு) ஸ்பரே அடிக்க வேண்டும் என்பது புரியும்)

இடைஇடையே மற்ற டயர்களின் மேல் அவ்வப்போது தண்ணீர் ஊற்றவும். முக்கியமாக 12 / 18 சக்கரங்களுடைய லாரிகளுக்கு, இல்லையெனில் மற்ற டயர்கள் காய்ந்துவிடும். (இப்படியாக மீண்டும் மீண்டும் டயர்களை ஈரமாக்க அதிகமான தண்ணீரை ஊற்றாமல், சிறிய வாகனங்களுக்கு ஒரு சிறிய 1 (அ) 2 லிட்டர் தண்ணீர் ஸ்ப்ரேயினை கொண்டு, பெரிய



## டின்லாக் டயர் ஸ்ப்ரே வாகனங்களின் டயர்களின் மேல் ஸ்ப்ரே செய்யும் வழிமுறைகள் (பஸ்/லாரி/MCV/LCV/வேன்/ஜீப்/கார்/ஆட்டோ/பைக்/ஸ்கூட்டர் டயர்களுக்கு) பக்கம் 2

வாகனங்களாயின் 10 / 16 லிட்டர் விவசாய ஸ்ப்ரேயரை கொண்டு, சாதாரன தண்ணீரை டயர்களின் மேல் ஸ்ப்ரே செய்து டயர்களை காய்ந்து விடாமல், தண்ணீரில் ஊரப்படுத்தலாம்), ஒவ்வொரு டயராக ஜாக்கியனால் தூக்கி, அந்த டயரை மீண்டும் இருமுறை நன்கு கழுவி, டயரை நன்கு ஈரமாக்கி, பிரஷ்ஷினால் அதிகபடியான தண்ணீரை விலக்கி. இப்படி செய்ய (முன்னதாக 20~30 நிமிடங்கள் தண்ணீர் ஊற வைத்த பிறகு) ஒரு டயருக்கு 2 (அ) 3 நிமிடங்களே போதும். டயர் முழுவதும் ஈரமாயிருக்கையிலே, மேற்கூறியபடி டயரினை மெதுவாக சுற்றி, ஸ்ப்ரேயினை அடிக்க வேண்டும். டயர்கள் நன்கு தண்ணீரில் ஊறி இருந்தாலே அதிகமான மைலேஜ் கிடைக்கும். இப்படியாக எல்லா டயருகளுக்கும், ஒவ்வொது டயராக, டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்து முடிக்க வேண்டும். குளிர் பிரதேசங்களிலும், மிக குளிர் காலங்களிலும் சுமார் 20-25 டிகிரி மிதமான நீரை டயர் கழுவ உபயோகிக்கவும். உபரி டயருக்கும் இதேபோல் மறக்காமல் கலவை அடிக்கவும்.

**டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்ததின் பலனை உடனே 1 மணி நேரத்தில் நிரூபிக்கலாம் :** மேற்கூறியபடி முறையாக டயர்களை தண்ணீரில் நன்கு ஊற வைத்து, மேற்கூறியபடி முறையாக டின்லான் டயர் ஸ்ப்ரே அடித்தால், அடித்து முடித்த 1 மணி நேரத்தில், டயர் நன்கு நல்ல ரப்பராகும். இதனை அறிய ஸ்ப்ரே அடிப்பதற்கு முன்பு ஒரு சாவியினால் டயரினை குத்தவும், பிறகு டின்லாக் ஸ்ப்ரே அடித்து முடித்து 1 மணிக்கு பிறகு, அதே சாவியினால், அதே டயரில், அதே இடத்தில் குத்தினால் ஸ்ப்ரே செய்யபட்ட டயர் நன்கு நல்ல ரப்பராக மாறி இருப்பதை உடனே உணரலாம். ஒரு டயர் சோதிக்கும் கருவி (**Durometer**) கொண்டும் டின்லாக் ஸப்ரே செய்யபட்ட டயர் மட்டும் நல்ல ரப்பராக மாறியிருப்பதை அறியலாம்.

2. **முன்னெச்சரிக்கைகள்** : டின்லாக்ஃ டயர் சேமிப்பான் கலவை அடித்த 3 மணி நேரத்திற்குள் டயர்களின் மேல் எந்த தண்ணீரும் படாமல் பார்த்துக்கொள்ளவும். ஆகையால் வாகனம் கழுவும் நிலையங்களினுள்ளோ டின்லாக்ஃ டயர் ஸ்ப்ரேஅடிக்ககூடாது. வாகனம் தண்ணீரில் கழுவும் நிலையங்களிலிருந்து 200 ~ 300 அடி தூரத்திற்கு ஓட்டி, நல்ல உலர்ந்த இடத்தில் வாகனத்தை நிறுத்தி, டயர்களை ஓரிறு முறை மட்டும் கழுவி, டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்கலாம் (ஏனெனில் டயர்களுக்குள் தண்ணீர் நன்கு ஊறி இருக்கும்). மழை பொழியும் நாட்களிலும் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்ககூடாது, ஏனெனில் ஸ்ப்ரே அடித்தபிறகு மழைநீர் பட்டுவிடும். எல்லா டயர்களுக்கும் ஸ்ப்ரே அடித்து முடித்தபிறகு முக்கால் (அ) ஒரு மணி நேரம் கழித்து வாகனத்தை ஓட்டலாம். டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்ததின் பலன்களை 12~24 மணி நேரத்தில் முழுமையாக உணரலாம். (மழை காலங்களில் 3 (அ) 4 மணி நேரம் கழித்துதான் வாகனத்தை சாலையில் ஓட்ட வேண்டும், ஏனெனில் செல்லும் சாலையில் அங்கெங்கு தண்ணீர் தேங்கியிருக்கும், டின்லாக் ஸ்ப்ரே செய்து 3 மணி நேரத்திற்கு டயர்களில் தண்ணீர் படகூடாது) ஆனால் மழை காலங்களில் டயர்கள் நன்கு தண்ணீரில் ஊறியிருக்கும். ஆகையால் டயர்களை ஓரிறு முறை நன்கு கழுவி டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்கலாம். ஆனால் 3 (அ) 4 மணி நேரம் கழித்தே வாகனத்தை ஓட்ட வேண்டும்.

3. **ஒரு டயருக்கான டின்லாக் டயர் ஸ்ப்ரே தேவையான அளவுகள்** :

லாரி/பஸ் 30~33மில்லி. **MCV** 25~30. பெரிய கார்/**SUV**/எல்.சி.வி/ஜீப்/வேன் **20~**25 பைக்/சிறியகார் 12~18மில்லி. ஆட்டோ/ஸ்கூட்டர்/டெம்போ 10~12மில்லி. டிராக்டர் 70~80மில்லி. (ஸ்ப்ரே செய்யும் அளவு 10% க்கு மேல் அதிகமாகவோ, குறையவோ கூடாது.) சரியான அளவிகளில் ஸ்ப்ரே செய்தால் நல்ல பலன்கள் கிட்டும். டயர்களின் மேல் இருமுறை ஸ்ப்ரே அடிக்க கூடாது. டயரின் பக்கங்களில் ஸ்ப்ரே அடிக்க கூடாது. டயர்கள் சாலையில் படும் பகுதியில் மட்டும் ஸ்ப்ரே அடிக்க வேண்டும்.

4. **டயர்களுக்கு கலவை மறுபடியும் அடிப்பதற்கான காலங்கள்** :

ஸ்கூட்டர்/ஆட்டோ/மினிடோர் போன்ற சிறிய டயர்கள் 2000கி.மீ க்கு ஒருமுறை. பைக்/கார்/**SUV**/எல்.சி.வி/ஜீப்/வேன் போன்ற மிதமான அளவிளான டயர்களுக்கு 3000கி.மீ க்கு ஒருமுறை. பஸ் டயர்களுக்கு 5000கி.மீ, லாரி 7500 கி.மீ க்கு ஒருமுறை (**+**/- 500 கி.மீ)

**செய்யகூடாதவைகள்** : 1. சூடான அல்லது காய்ந்த டயர்களின் மேல் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க கூடாது. 2. நேரடி வெய்யில் படும் டயர்களின் மேல் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க கூடாது, ஏனெனில் அது சூடாகவே இருக்கும். 3. சற்றுமுன் ஓட்டி வந்து நிறுத்திய வாகனத்தின் டயர்கள் சூடாக இருக்குமாகையால் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க கூடாது.

**டின்லாக் டயர் ஸ்ப்ரே வாகனங்களின் டயர்களின் மேல் ஸ்ப்ரே செய்யும் வழிமுறைகள் (பஸ்/லாரி/MCV/LCV/வேன்/ஜீப்/கார்/ஆட்டோ/பைக்/ஸ்கூட்டர் டயர்களுக்கு) பக்கம்** 3

டயர்கள் நன்கு குளிர்ந்த பிறகே டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க வேண்டும். 4. இரண்டு பாட்டில டின்லாக் டயர் ஸ்ப்ரேயை கலந்து உபயோகிக்க கூடாது. 5. பாதி காய்ந்திருக்கும் டயரின் மேல் கலவை பூசகூடாது. டயரை மீண்டும் தண்ணீரால் கழுவி பிறகே கலவை அடிக்க வேண்டும். 6. டின்லாக் டயர் ஸ்ப்ரேயை சேறுபடிந்த அல்லது அழுக்காக உள்ள டயரின் மேல் அடிக்க கூடாது. 7. எல்லா டயர்களுக்கும் கலவை முழுவதுமாக டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்து முடித்த பின்பு 45 /60 நிமிடத்திற்குள் வாகனத்தை ஓட்ட கூடாது (மழை காலங்களில் 3 மணி நேரத்திற்கு வாகனத்தை நகர்த்தவோ, ஓட்டவோ கூடாது). 8. டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்த 3 மணி நேரத்திற்குள் டயர்களின் மேல் எந்த தண்ணீரும் படகூடாது. 9. டயரை தண்ணீரால் கழுவி நேரம் கழித்து கலவை அடிக்ககூடாது. உடனடியாக அடிக்கவேண்டும். அப்படி தாமதம் ஏற்படுகையில், டயரை மீண்டும் தண்ணீர்விட்டு கழுவி நன்கு ஈரமாக்கி பிறகு உடனே டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்க வேண்டும். 10. டயர் சேமிப்பான் வெறும் தண்ணீரல்ல. ஆகையால் ஸ்ப்ரே பாட்டிலை தண்ணீரறுகில் வைக்க கூடாது. எட்டவே வைக்க வேண்டும். டின்லாக் டயர் ஸ்ப்ரேயும் தண்ணீரும், பாலும் தயிரும் போலாகும். இவற்றை தனி தனியே வைத்திருக்க வேண்டும். 11. டயர்களின் பக்கங்களில் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்ககூடாது. 12. டின்லாக் டயர் ஸ்ப்ரே இருமுறை அடிக்ககூடாது.

**செய்யகூடியவைகள் :** 1. நிறைய தண்ணீர் கிடைக்கவில்லையெனில், குறைந்த தண்ணீரையே மீண்டும் மீண்டும் 10~20 நிமிடங்களுக்கு டயரின் மேல் ஊற்றி, கைபிரஷினால் தடவி தண்ணீர் டயருக்குள் நன்கு ஊறும்படி செய்யலாம். டயரினை முதலில் ஒருமுறை நன்கு கழுவிய பிறகு, ஒரு சிறிய 1 / 2 லிட்டர் தண்ணீர் ஸ்ப்ரேரை கொண்டு தண்ணீர் டயர்களின் மேல் மீண்டும் மீண்டம் ஸ்ப்ரே செய்து தண்ணீரை டயரினுள் ஊற செய்யலாம். (பெரிய வாகனங்களுக்கு 10 / 16 லிட்டர் பூச்சி மருந்து ஸ்ப்ரேயரை உபயோகிக்கலாம்), டயருக்குள் தண்ணீர் நன்கு ஊறிய டயர்களில் டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்தாலே நல்ல பலன்கள் கிட்டும், அதிக மைலேஜ் கிடைக்கும். ஆகையால் அதிக எரிபொருள் மைலேஜ் கிடைக்க, டின்லாக் டயர் ஸ்ப்ரே செய்யும் முன்பு, டயர்களை நன்கு தண்ணீரில் ஊற வைக்கவும். 12 டயர்களுக்கு மேல் உள்ள லாரிகளின் டயர்களை கையால் கழுவுவது அதிகமான வேலையாகும். ஆகையால் அவற்றை தண்ணீரில் கழுவும் நிலையங்களுக்கு கொண்டு சென்று, 20 நிமிடங்களுக்கு எல்லா டயர்களையும் நன்கு தண்ணீரால் கழுவி, பிறகு வெளியில் சுமார் 200 (அ) 300 அடி தூரம் ஓட்டி சென்று, உலரந்த இடத்தில் நிறுத்தி, ஜாக்கி போட்டு, மீண்டும் ஒவ்வொரு டயராக ஓரிரு முறை கழுவி, டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்கலாம். டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிக்கும் முன் டயர்கள் சுத்தமாகவும், ஈரமாகவும் இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

**குறிப்பு :** டின்லாக் டயர் ஸ்ப்ரே அடித்த டயர்கள் (காற்று) தரையிரங்கினாற்போல் ஆகி விடுவதால் டயரின் காற்றின் அளவினை சரி பார்த்த தேவையான அளவிற்கு மீண்டும் காற்று ஏற்ற வேண்டும்.

**வீடியோ லிங்க் :** நன்கு தண்ணீரில் கழுவப்பட்ட, நன்கு தண்ணீரில் ஊறவைக்கபட்ட டயர்களுக்கு எப்படி டின்லாக் டயர் ஸ்ப்ரே அடிப்பது என்கிற வீடியோக்களை கீழே கொடுக்கப்பட்ட லிங்க்குகளில் பார்க்கலாம் :

| | |
|---|---|
| பைக் டயர்களுக்கு | https://youtu.be/jb8cgFVieKo |
| கார் டயர்களுக்கு | https://youtu.be/Nxp0kD1cc-U |
| பஸ் / லாரி டயர்களுக்கு | https://youtu.be/2A7My4aDsvg |

*ஜாக்கி உபயோகிக்காமல் 12-16-22 லாரி டயர்களுக்கு டின்லாக் டயர் ஸ்பிரே ஸ்பிரே செய்வது எப்படி?*

இந்த வீடியோவில் ஜாக்கியைப் பயன்படுத்தாமல் மல்டி ஆக்சில் லாரிகளுக்கு டின்லாக் டையர் ஸ்ப்ரேவை எவ்வாறு ஸ்பிரே செய்வது என்பதைப் பார்க்கப்போகிறோம். 10 அங்குல அகலம் 24 அங்குல நீளம் கொண்ட பிளாஸ்டிக் தாள்களைப் பயன்படுத்துவதன் மூலம், இதனை சுலபமாக செய்யலாம்.

டின்லாக் டையர் ஸ்ப்ரேயை ஸ்பிரே செய்ய, அனைத்து டையர்களையும் 1 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். எனவே, ஆரம்பத்தில் இருந்தே அனைத்து டையர்களின் மேலும் தண்ணீரை ஊற்றவும். மீண்டும் மீண்டும் 3 அல்லது 4 நிமிடங்களுக்கு ஒரு முறை தண்ணீர் ஊற்றவும். இந்த டையர் தெளிப்பதற்காக, லாரியை உயர் மேடு அல்லது உயரமான இடத்தில் நிறுத்துங்கள். இந்த வழியில், டையர்களைச் சுற்றி தண்ணீர் தேக்கமடையாது. டையர்களை சுத்தம் செய்வதற்கும் ஈரமாக்குவதற்கும் குறைந்த தண்ணீரை மட்டுமே பயன்படுத்துங்கள்.

பிரஷ் மற்றும் தண்ணீரினால் டையர்களை முதலில் சுத்தம் செய்த பிறகு, டையர்களை மேலும் ஈரமாக்குவதற்கு, ஒவ்வொரு 3 அல்லது 4 நிமிடங்களுக்கும் ஒரு முறை டையர்களுக்கு மேல் தண்ணீரை ஸ்பிரே செய்ய ஒரு சுத்தமான விவசாய ஸ்பிரேயரை பயன்படுத்தலாம். முதலில் அனைத்து டையர்களையும் பிரஷ் மற்றும் தண்ணீரினால் சுத்தம் செய்யுங்கள், அதாவது உங்கள் லாரிகலின் 12 அல்லது 18 அல்லது 22 டையர்களையும். இந்த வழியில் 80% டையர்களை மட்டுமே சுத்தம் செய்ய முடியும். கீழே 20% டையர் தரையில் உள்ளது. டையர்களின் இந்த 20% பகுதியை சுத்தம் செய்ய முடியாது.

இந்த அடிப்பகுதியை 20% சாக்பீஸினால் தெளிவாக குறிக்கவும். இப்போது, பிரஷ் மற்றும் தண்ணீ ரினால் அனைத்து டையர்களையும் சுத்தம் செய்த பிறகு, லாரியை இரண்டரை அடி முன்னோக்கி நகர்த்தவும். எல்லா சக்கரங்களிலும் கீழே இருந்த 20% பகுதி பின்புறம் வருகிறது. இதை நீங்கள் இந்த வீடியோவில் காணலாம். இப்போது அனைத்து டையர்களிலும் 20% சாக்பீஸ் குறிக்கப்பட்ட பகுதியை பிரஷ் மற்றும் தண்ணீரில் சுத்தம் செய்யுங்கள். 3 அல்லது 4 நிமிடங்களில் ஒரு முறை எல்லா டையர்களிலும் எப்போதும் தொடர்ந்து தண்ணீரைப் தெளியுங்கள் அல்லது ஊற்றுங்கள், இதனால் டையர்கள் உலராது.

10 அங்குல அகலம் 12 அங்குல நீளம் கொண்ட பிளாஸ்டிக் கவர்கள் வாங்கவும். பிளாஸ்டிக் கவர்களை கத்திரி கோலால் வெட்டி முழுவதுமாக திறக்கவும். இப்போது நீங்கள் 10 அங்குல அகலம் 24 அங்குல நீளம் கொண்ட பிளாஸ்டிக் தாள்களைப் பெறுவீர்கள். எண் 10 கொண்ட சிறிய அளவு ஸ்டேப்லரைப் பயன்படுத்துவதன் மூலம், டையர்களின் சமீபத்தில் சுத்தம் செய்யப்பட்ட, 20% சாக்பீஸ் குறிக்கப்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் தாள்களை கிளிப் செய்யவும். எல்லா டையர்களிலும் இதைச் செய்யுங்கள்.

இப்போது லாரியை இரண்டரை அடி பின்னோக்கி நகர்த்தவும். எல்லா டையர்களிலும், தரையைத் தொடும் டையர்களின் கீழ் பகுதி பிளாஸ்டிக்கால் மூடப்பட்டிருக்கும் என்பதை இப்போது நீங்கள் காண்பீர்கள். அனைத்து டையர்களின் முன் பக்கமும், பிரஷ் மற்றும் தண்ணீரினால் மீண்டும் சுத்தம் செய்யுங்கள், 3 அல்லது 4 நிமிடங்களுக்கு ஒரு முறை அனைத்து டையர்களிலும் தண்ணீரை தெளியுங்கள் அல்லது ஊற்றுங்கள். இதனால் டையர்கள் உலராது.

இப்போது உடனடியாக, டையர்கள் மிகவும் ஈரமாகவும், தண்ணீரில் நனைந்ததாகவும் இருப்பதால், அனைத்து டையர்களிலும் மேலே தெரியும் 80% பகுதியின் மட்டுமே டின்லாக் டையர் ஸ்ப்ரேயைப் ஸ்பிரே செய்யுங்கள். டின்லாக் டையர் ஸ்ப்ரே செய்வதற்கு சற்று முன்பு. ஒவ்வொரு டயரின் மேலும் எப்போதும் தண்ணீரை ஊற்றவும் அல்லது தெளிக்கவும்,

இந்த வழியில், 16 டையர்களுக்கு கூட ஸ்பிரே செய்ய, இது 16 நிமிடங்களுக்கும் குறைவாகவே ஆகும்.

டயர் ஸ்ப்ரே ஸ்பிரே செய்த பிறகு, டையர்களுக்கு மேல் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம். கடைசி டையரில் ஸ்பிரே செய்த பிறகு, அனைத்து டையர்களின் பின்புறத்தில் உள்ள பிளாஸ்டிகில் உள்ள ஸ்டேப்லர் பின்னை அகற்றவும், எனவே பிளாஸ்டிக் படத்திற்குள் மீதமுள்ள எல்லா நீரும் தரையில் மட்டுமே விழும்.

இப்போது, லாரியை இரண்டரை அடி முன்னோக்கி நகர்த்தவும்,. எல்லா டையர்களிலிருந்தும் பிளாஸ்டிக் தாள்களை அகற்றவும். இந்த பிளாஸ்டிக் தாள்களை மீண்டும் பயன்படுத்த வேண்டாம். எப்போதும் புதிய பிளாஸ்டிக் பைகளை வாங்கி பயன்படுத்தவும். இப்போது கீழேயிருந்த 20% பகுதி எல்லா டையர்களிலும் மிகவும் ஈரமாக இருப்பன,ந நீங்கள் காணலாம். ஏனெனில் ஊற்றிய எல்லா தண்ணீரும் கீழே சேர்ந்திருக்கும். இப்போது உடனடியாக எல்லா டையர்களின் சாக்பீஸ் குறிக்கப்பட்ட 20% டையர்களின் மேல் டின்லாக் டையர் ஸ்ப்ரேயைப் ஸ்ப்ரே செய்யுங்கள்,. இவ்வாறு ஜாக்கியைப் பயன்படுத்தாமல், ஒரே நேரத்தில் அனைத்து டையர்களுக்கும் ஸ்ப்ரே செய்து முடிக்கலாம்.

இந்த வழியில் 12 அல்லது 16 அல்லது 22 சக்கர லாரிகள் கொண்ட மல்டி ஆக்சில் லாரிகளின் அனைத்து டையர்களுக்கும், ஜாக்கியைப் பயன்படுத்தாமல், ஒரே நேரத்தில் டின்லாக் டையர் ஸ்ப்ரேயைப் ஸ்ப்ரே செய்து முடிக்கலாம்.

Prepared By: Dlag Technologies, New No.21, Thambaiah Road Extn., West Mambalam, Chennai-33. INDIA. Website: www.dlagtech.com Emails: dlagtech25@gmail.com




**டயர்களின் கீழ் 25% பகுதி வெள்ளை கோடிட்டு இருப்பதை பார்க்கவும்**

25-03-2025